# 11 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### ஒரிசா உயர்நீதிமன்றத்தின் 33வது தலைமை நீதிபதியாக "சுபாசிஸ் தலபத்ரா" பதவியேற்றார்



- திரிபுராவின் உதய்பூரைச் சேர்ந்தவர் நீதிபதி சுபாசிஸ் தலபத்ரா.
- அவர் டிசம்பர் 21, 2004 அன்று மூத்த வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். நவம்பர் 15, 2011 அன்று, அசாம் மாநிலம் கவுகாத்தியில் உள்ள கவுகாத்தி உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாகப் பதவியேற்றார்.
- செப்டம்பர் 13, 2013 அன்று, திரிபுரா உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.
- அவர் நவம்பர் 2– 13, 2018 மற்றும் நவம்பர் 11–15, 2019 வரை இரண்டு முறை திரிபுரா உயர் நீதிமன்றத்தின் செயல் தலைமை நீதிபதியாக பணியாற்றினார்.
- அவர் ஜூன் 1, 2022 அன்று ஒரிசா உயர் நீதிமன்ற நீதிபதியாக மாற்றப்பட்டார், மேலும் அவர் ஜூன் 10, 2022 அன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

### ஜம்மு–காஷ்மீரில் சர்வதேச எல்லைப் பகுதியில் நாட்டின் முதல் தபால் நிலையம்




- ஜம்மு–காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாடு கோடு பகுதியில் கிஷண்கங்கா ஆற்றங்கரையில் அமைந்துள்ள "கேரான் தபால் நிலையத்துக்கு நாட்டின் சர்வதேச எல்லைப் பகுதியில் முதல் தபால் நிலையம்" என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- எல்லைக் கட்டுப்பாட்டு கோடுக்கு மிக அருகில் அமைந்தி ருப்பதால் இந்தப் புதிய அங்கீகாரத்தை இந்திய ராணுவம் வழங்கியுள்ளது.
- இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னிருந்தே இயங்கிவரும் இந்தத் தபால் நிலையத்தில் கடந்த 1965, 1971–ஆம் ஆண்டுகளில் நடந்த போர் காரணமாக சர்வதேச எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவிய சூழல்களிலும் சேவை நிறுத்தப்பட்டதில்லை.

SHANMUGAM IAS ACADEMY

# விளையாட்டு

## யு.எஸ். ஓபனில் 'டபுள் பவுன்ஸ் ரிவ்யு' அறிமுகம்



- ❖ நடப்பாண்டு யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியில் 'டபுள் பவுன்ஸ்' குழப்பத்தை தீர்க்க காணொலி மறு ஆய்வு (வீடியோ ரிவ்யு) முறை அறிமுகம் செய்யப்படுகிறது.
- ❖ கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இத்தகைய வசதி கொண்டுவரப்படுவது இதுவே "முதல் முறையாகும்".
- ❖ டென்னிஸில் ஒரு போட்டியாளர் பந்தை அடிக்கும்போது, எதிரில் இருக்கும் போட்டியாளர் அந்தப் பந்தை திருப்பி அடிப்பதற்கு முன் பந்து ஒரு முறை மட்டுமே தரையில் பட்டிருக்க வேண்டும்.
- ❖ ஆனால், ஆட்டங்களின்போது சில வேளைகளில் அது இருமுறை தரையில் பட்டது போல (டபுள் பவுன்ஸ்) தெரிய, இரு தரப்புக்கும் இடையே அதில் குழப்பம் எழுகிறது.
- ❖ அந்த நேரத்தில் இருக்கை நடுவரின் முடிவு எதுவோ, அதுவே இறுதியாக இருக்கிறது. தற்போது அதுபோன்ற சூழலில் நடுவர் ஆட்டத்தின் காணொலியை மறுஆய்வு செய்து முடிவு மேற்கொள்ளும் வசதியை யு.எஸ். ஓபன் அறிமுகம் செய்கிறது.

### முதல் முறை

- ❖ பந்து 'இன்' அல்லது 'அவுட்' என்பதை அறிவதற்கான மின்னணு எல்லைக்கோடு தொழில்நுட்பம் (2006), ஒரு போட்டியாளர் தனது சர்வை மேற்கொள்ள அவருக்கு இருக்கும் அவகாசத்தை அறிவிக்கும் கடிகாரம் (2018), ஆட்டத்தின்போது பயிற்சியாளருடன் உரையாட அனுமதி (2022) போன்றவற்றை முதன் முதலில் அறிமுகம் செய்த கிராண்ட்ஸ்லாம் போட்டியும் யு.எஸ். ஓபன் என்பது குறிப்பிடத்தக்கது.

# அறிவியல் & தொழில்நுட்பம்

## செயற்கை நுண்ணறிவு (AI)




- ❖ சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் விபத்துகளைத் தணிப்பதற்கும் தயாராக இருக்கும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான விபத்து தடுப்பு அமைப்புக்கான காப்புரிமையை இந்திய ராணுவம் (IA) பெற்றுள்ளது.
- ❖ இது இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) பிரிவிற்குள் உருவாக்கப்பட்டது, மேலும் "கர்னல் குல்தீப் யாதவ்" இந்த தடுப்பு முறையை கண்டுபிடித்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

SHANMUGAM IAS ACADEMY

❖ இந்த அமைப்பு ஓட்டுநர்களை தூங்கவிடாமல் எச்சரிப்பதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுகிறது மற்றும் தூக்கமின்மையால் ஏற்படும் விபத்துகளைக் குறைக்கிறது.

## பூமி, நிலவை துல்லியமாக படம் பிடித்த சந்திரயான்–3



❖ சந்திரயான்–3 விண்கலம் எடுத்த பூமி மற்றும் நிலவின் 2 புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. நிலவில் தரையிறங்கி ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்த சந்திரயான்–3 விண்கலம், எல்விஎம்–3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14–ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.

❖ பல்வேறு கட்ட பயணங்களுக்கு பின்னர், ஆக.5–ம் தேதி நிலவின் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான்–3 நுழைந்தது.

❖ இந்நிலையில், சந்திரயான்–3 விண்கலம் எடுத்த பூமி மற்றும் நிலவின் 2 புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

❖ அதாவது, நிலவில் தரையிறங்கக்கூடிய லேண்டரில் உள்ள "எல்எச்விசி எனும் கிடைமட்ட கேமரா" மூலம் நிலவின் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

❖ அதில் 120 கி.மீ. விட்டம் கொண்ட "பிதாகரஸ் பள்ளம், எரிமலைகளால் ஏற்பட்ட ஓசியானஸ் புரோசெல்லாரம், அரிஸ்டார்கஸ் பள்ளம், ராமன் பள்ளத்தாக்கு மேற்பரப்பை" காணமுடிகிறது.

# வங்கி & நிதி

## இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து மூன்றாவது முறையாக ரெப்போ விகிதத்தை மாற்றாமல் தொடர முடிவு செய்துள்ளது.




❖ ரிசர்வ் வங்கியின் ஆளுநர் "சக்திகாந்த தாஸ்", நாணயக் கொள்கைக் குழு (எம்பிசி) ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 6.5% ஆக வைத்திருக்க ஒருமனதாக முடிவு செய்துள்ளதாக அறிவித்தார்.

❖ "ரெப்போ ரேட்" என்பது வணிக வங்கிகளுக்கு ஆர்பிஐ கடனளிக்கும் விகிதமாகும்.

❖ ஸ்டாண்டிங் டெபாசிட் வசதி (SDF) விகிதம் 6.25% ஆகவும், விளிம்பு நிலை வசதி (MSF) விகிதம் மற்றும் வங்கி விகிதம் 6.75% ஆகவும் மாறாமல் உள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## தொழில் வளர்ச்சிக்கு சிறந்த மாநிலம் தமிழ்நாடு



- தொழில் வளர்ச்சிக்கான சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.
- அடுத்த ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கான இலச்சினையை சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றும் விதமாக, 2030–ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும்.
- அந்த வகையில் முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாகவும் பல லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்படும்.
- மாநிலத்தின் இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு பலமடங்கு அதிகரிக்கும்.
- மாநிலத்தின் பொருளாதாரமும் பெருமளவு வளர்ச் சியடையும்
- தமிழகத்தில் உள்ள பல்வேறு தொழில்துறை கூட்டமைப்பினரும் மாநிலத்தின் விளம்பரத் தூதராக மாறி, முன்னணி நிறுவனங்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்.
- இலச்சினை: முதல்வர் வெளியிட்ட இலச்சினை தமிழ்நாட்டின் முதல் எழுத்தான 'த'வை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.
- மேலும், கணினிமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கம், நகரமயமாக்கப்பட்ட சமூகம் போன்ற கூறுகளில் வேகமாக முன்னேறுவதைத் தெரிவிக்கும் விதமாக, 'த'–வின் மேல்பகுதி அம்புக் குறியிட்டு உயர்த்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தியில், உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கான பிரத்யேக இணைய தளம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்
- 'மீள்திறனுடன் நீடித்து நிலைக்கத் தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி' என்பதே உலக முதலீட்டாளர் மாநாட்டின் முக்கிய கருப்பொருள்
- அதாவது மாநிலங்கள் ,முழுவதற்குமான அனைவரின் வளர்ச்சியையும் உள்ளடக்கிய நோக்கங்களை கொண்டு மாநாடு நடத்தப்பட உள்ளது

SHANMUGAM IAS ACADEMY

## புதுக்கோட்டை அருகே பொற்பனைக்கோட்டை அகழாய்வில் காணப்பட்ட வட்டச் சுவர்கள்



- புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் உள்ள வட்டக் கோட்டையின் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் வட்டச் சுவர்கள் தென்பட்டுள்ளது.
- பொற்பனைக்கோட்டையில் சங்க காலத்தைச் சேர்ந்த வட்டக் கோட்டை, கொத்தளம் இருந்ததற்கான கட்டுமானம் உள்ளது.
- இதே போல, கோட்டையின் உள் மற்றும் வெளிப்பகுதிகளில் அகழி உள்ளது. இங்கு, தொல்லியல் துறை சார்பில் கடந்த மே மாதம் தொடங்கி அகழாய்வுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.
- இந்நிலையில், அகழாய்வு பணி நடைபெற்று வரும் ஒரு குழியில் வடிவிலான சுவர் தென்பட்டுள்ளது.
- அடுத்தடுத்து 4 வட்டச் சுவர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

- இங்கு, தொல்லியல் துறை சார்பில் கடந்த மே மாதம் தொடங்கி அகழாய்வுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன
- தலா 15 அடி நீள, அகலத்தில் 13 இடங்களில் அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது.
- இதுவரை, தங்க மூக்குத்தி, பல்வேறு விதமான பானை ஓடுகள், கண்ணாடி வளையல்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான தொல்பொருட்கள் கண்டெஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## செங்கல்பட்டு அருகே ரூ. 515 கோடியில் அழகுசாதன பொருள்கள் தயாரிப்பு ஆலை

- செங்கல்பட்டு அருகே அழகு சாதனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மையத்தை ரூ.515 கோடியில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை கையொப்பமானது.
- கோத்ரேஜ் நிறுவனத்தின் சார்பில் இந்த ஆலை அமைக்கப்பட உள்ளது.
- தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் உற்பத்தி மையத்தை நிறுவ முடிவு செய்துள்ளது.
- நுகர்வோருக்கு பொருள்களைத் தயாரிக்கும் கோத்ரேஜ் நிறுவனமானது, இந்தியாவில் 33 இடங்களில் தனது உற்பத்தி அலகுகளை நிறுவியுள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, ரூ.515 கோடி முதலீட்டில் 446 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட உள்ளது.

- செங்கல்பட்டு அருகே அமையவுள்ள ஆலையின் மூலமாக, சோப்புகள், முக அழகு க்ரீம்கள், தலை முறை பராமரிப்பு சாதனங்கள், கொசு ஒழிப்பான் போன்றவை உற்பத்தி செய்யப்பட உள்ளன.
- இந்த நிறுவனத்தில் 50 சதவீதம் அளவுக்கு பெண்களுக்கு வேலை மேலும், திருநங்கைகள், மாற் றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

## மாநில நடப்பு விவகாரங்கள்

### "ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம்"




- நிதி ஆயோக்கின் டெல்டா தரவரிசையில் ஹரியானாவின் நூஹ் மாவட்டத்தில் 30வது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியதால், ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம் நேர்மறையான முடிவுகளை அளித்துள்ளது.
- இது தொடர்பான விவரங்களைப் பகிர்ந்து கொண்ட துணை ஆணையர் எஸ். இந்தியாவில் சமூக–பொருளாதார ரீதியாக மிகவும் சவாலான மாவட்டங்களை மேம்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும், நூஹ் மாவட்டத்தில் இந்த முன்னேற்றம் நிச்சயமாக சரியான திசையில் ஒரு படியாகும் என்றும் திரேந்திர கத்கதா கூறினார்.
- மேலும், விவசாயம் மற்றும் நீர் ஆதாரங்களில் மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
- அதேபோல், சுகாதாரம் மற்றும் சத்துணவில் மாவட்டம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

### ராஜஸ்தான் அரசு ஜெய்ப்பூரில் "இந்திரா காந்தி ஸ்மார்ட் போன் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது.



- இந்த திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள 1.3 கோடி பெண்கள் மூன்று வருட டேட்டாவுடன் கூடிய இலவச ஸ்மார்ட்போன்களைப் பெறுவார்கள்.
- முதற்கட்டமாக 40 லட்சம் பெண்கள் ஸ்மார்ட்போன்களைப் பெறுவார்கள். ராஜஸ்தான் முழுவதும் 400க்கும் மேற்பட்ட மொபைல் விநியோக முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- அரசுப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகள், கல்லூரி மாணவர்கள், ஒற்றைப் பெண்கள், விதவைகள் ஆகியோருக்கு ஸ்மார்ட்போன்கள் வழங்கப்படும்.
- முதல் கட்டமாக, மகாத்மா காந்தி என்ஆர்இஜிஏவின் கீழ் 100 நாட்களும், இந்திரா காந்தி நகர்ப்புற வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 50 நாட்களும் பணிபுரிந்த குடும்பத் தலைவர்களுக்கு தொலைபேசி வழங்கப்படும்.

SHANMUGAM IAS ACADEMY

❖ பயனாளிகள் முகாம்களில் தங்களுக்கு விருப்பமான ஸ்மார்ட்போன்களை தேர்வு செய்யலாம்

### சத்தீஸ்கரின் தம்தாரியில் 'கமர்' பழங்குடியினர் வாழ்விட உரிமையைப் பெற்றுள்ளனர்.



❖ இந்த நடவடிக்கையின் மூலம், அத்தகைய அங்கீகாரத்தை வழங்கிய (மத்தியப் பிரதேசத்திற்குப் பிறகு) நாட்டின் இரண்டாவது மாநிலமாக சத்தீஸ்கர் ஆனது.
❖ இது அவர்களின் கலாச்சாரம் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உதவும், மேலும் அவர்களின் வளர்ச்சிக்காக அரசு பாடுபட முடியும்.
❖ கமர் பழங்குடியினர் முக்கியமாக "கரியாபண்ட், தம்தாரி, மஹாசமுண்ட் மற்றும் கான்கர்" மாவட்டங்களில் வசிக்கின்றனர்.
❖ சத்தீஸ்கரில் "அபுஜ்மாடியா, பைகா, கமர், பிர்ஹோர் மற்றும் பஹாடி கோர்வா" உள்ளிட்ட ஐந்து பழங்குடி குழுக்களுகள் உள்ளன, அதே நேரத்தில் மாநில அரசாங்கம் மேலும் இரண்டு பழங்குடி குழுக்களுக்கு அந்தஸ்தை வழங்கியுள்ளது – அவை "பாண்டோ மற்றும் புன்ஜியா".

## தேசிய நடப்பு நிகழ்வுகள்

### நாட்டில் முதல்முறையாக பெண் கைதிகள் இயக்கும் பெட்ரோல் நிலையம்

❖ இந்தியாவிலேயே முதல் முறையாக பெண் கைதிகள் மட்டும் இயக்கும் பெட்ரோல் விற்பனை நிலையம் சென்னை அருகே புழலில் வியாழக்கிழமை திறக்கப்பட்டது.
❖ பெண் கைதிகள் நடத்தும் புதிய பெட்ரோல் விற்பனை நிலையத்தை வியாழக்கிழமை தொடங்கி வைத்த அமைச்சர் எஸ்.ரகுபதி.
❖ பெண் கைதிகள் பெட்ரோல் நிலையம்: இதில், இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னை புழல் அம்பத்தூர் சாலையில் பெண் கைதிகளே நடத்தும் பெட்ரோல் நிலையங் களைத் திறக்கத் திட்டமிடப்பட்டது.
❖ இதற்காக புழல் அம்பத்தூர் சாலையில் பெண்கள் தனிச் சிறை அருகே ரூ.1.92 கோடி மதிப்பில் 1,170 சதுர மீட்டர் பரப்பளவில் மற்றொரு பெட்ரோல் விற்பனை நிலையம் கட்டப்பட்டது.
❖ புதிதாக திறக்கப்பட்ட பெட்ரோல் விற்பனை நிலையத்தில் சுமார் 30 பெண் கைதிகள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் மாத ஊதியமாக ரூ.10,000 பெறுவார்கள்.
❖ பெண் கைதிகளால் இயக்கப்படும் இந்த பெட்ரோல் விற்பனை நிலையம் அவர்களின் சீர்திருத்தத்துக்கும், மறு வாழ்வுக்கும், சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணையவும் உதவும்.
❖ மேலும், பெண் கைதிகள் புதிய திறன்களைக் கற்றுக் கொள்வதற்கும், பணி அனுபவத் தைப் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கும்.

SHANMUGAM IAS ACADEMY

- இந்த வேலை பெண் கைதிகளுக்கு பொறுப்பு, கண்ணியம், சுய மதிப்பு ஆகியவற்றைக் கொடுத்து நம்பிக்கையையும், மன உறுதியையும் அதிகரிக்கும்

- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனு டன் இணைந்து கடந்த 2018–ஆம் ஆண்டு கைதிகள் பெட்ரோல் விற்பனை நிலையத்தை சென்னை புழலில் சிறைத் துறை முதல் முறையாக திறந்தது.
- இதைத் தொடர்ந்து, வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, புதுக்கோட்டை சிறு வர் கூர்நோக்கு இல்லம் ஆகிய 4 இடங்களில் சிறைத் துறை சார்பில் பெட்ரோல் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டன.
- இந்த நிலையங்கள் தற்போது ஆண் கைதிகள் இயக்கி வருகின்றனர்.
- ஒவ்வொரு பெட்ரோல் நிலையம் மூலமும் சுமார் 25 கைதிகள் வேலை வாய்ப்பு பெற்று வருகிறார்கள்.
- பெட்ரோல் நிலையம் மூலம் சிறைத் துறைக்கு நல்ல வருவாய் கிடைப்ப தோடு, கைதிகளும் சம்பாதித்து வருகின்றனர்.

## பிரிவு 370 நிரந்தரமானது என்று கூறுவது கடினம்

- ஜம்மு–காஷ்மீருக்கு பிரிவு 370–ஐ மட்டும் அடிப்படையா சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியலமைப்பாகக் கொண்டு, குறிப்பிட்ட விவகாரங்களில் பிரிவு 370 நிரந்தரமானது என கூறுவது கடினம் என உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை தெரிவித்தது.
- இந்த நடவடிக்கைகளை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில், நீதிபதிகள் சஞ்சய் கிஷண் கௌல், சஞ்சீவ் கன்னா, பி.ஆர்.க வாய், சூர்யகாந்த் ஆகியோர் அடங்கிய அரசியல்சாசன அமர்வுக்கு முன்பாக வியாழக்கி ழமை நடைபெற்றது.
- அப்போது தலைமை நீதிபதி, 'ஜம்மு–காஷ்மீர் எவ்வித நிபந்தனையும் விதித்து இந்தியாவுடன் இணையவில்லை.
- இணைப்பின்போது அதன் இறையாண்மை இந்தியாவிடம் முழு மையாக ஒப்படைக்கப்பட்டுவிட்டன.
- இந்தியாவுடன் ஜம்மு–காஷ்மீர் இணைப்பு அப்போதே முற்றிலும் முழுமையாகி விட்டது.
- அரசியல் சாசனத்தின் 1–ஆம் பிரிவு இந்தியாவில் இடம் பெறும் பிரதேசங்களைப் பட்டியலிடுகிறது.
- அதில் ஜம்மு–காஷ்மீர் இடம் பெற்றுள்ளது. அப்போதே அது இந்தியாவின் ஒரு பகுதியாகிவிட்டது. பிரிவு 370 என்பது அங்கு நாடாளுமன்றம் சட்டமியற்றும் வரம்பு குறித்தானது.
- ஜம்மு–காஷ்மீருக்கு இறையாண்மை உள்ளது என எடுத்துக் கொள்ள முடியாது
- இதற்கு மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஜாஃபர் ஷா, "ஜம்மு–காஷ்மீரைப் பொருத்த வரை பாதுகாப்பு, தகவல்தொடர்பு, வெளியுறவு ஆகிய விவகாரங்களில் மட்டுமே மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது என்றார்.

- முந்தைய ஜம்மு–காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை நாடாளு மன்றம் கடந்த 2019–இல் ரத்து செய்தது.
- ஜம்மு–காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம், 2019– இன்படி, ஜம்மு–காஷ்மீர், லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களாக அந்த மாநிலம் பிரிக்கப்பட்டது

### மருத்துவ பொருள்களின் உலகளாவிய உற்பத்தி மையம் இந்தியா

- மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களின் உலகளாவிய உற்பத்திமையமாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாநம்பிக்கை தெரிவித்தார்.
- குஜராத் மாநிலம் காந்திநகரில் ஆகஸ்ட் 17 முதல் 19–ஆம் தேதி வரையில் நடைபெற உள்ள இந்தியாவின் முதல் மருத்துவ தொழில் நுட்ப கண்காட்சியான இந்தியா மெட்டெக் எக்ஸ்போ 2023' நடைபெறவுள்ளது
- இந்தக் கண்காட்சியில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள், மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வசதிகளில் இந்தியாவின் கண்டுபிடிப்புகள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்தும் என்றார்.
- இந்தியாவின் மருத்து உபகரணங்களின் சந்தை மதிப்பு 2050– ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- நாட்டின் எழுச்சிப் பெற்று வரும் துறைகளில் ஒன்றாக மருத்துவஉபகரணங்கள் துறை கருதப்படுகிறது.
- இந்தியாவை மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி மையமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

- மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான கூட்டணி அரசுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களைவையில் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வியாழக்கிழமை தோல்வியடைந்தது.
- செவ்வாய்க்கிழமை முதல் மக்களவையில் இதன் மீது விவாதம் நடைபெற்று வந்த நிலையில், வியாழக்கிழமை மாலை பிரதமர் மோடி 2 மணி நேரத்துக்கும் மேலாக நீண்ட விளக்க மளித்துப்பேசினார்.
- அவரது பேச்சுக்கு நடுவே எதிர்ச் கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இதையடுத்து, வாக்கெடுப்பில் பங்கேற்க எதிர்க்கட்சிகள்இல்லாததால், குரல் வாக்கெடுப்பு மூலம் நம்பிக்கை யில்லா தீர்மானம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச நடப்பு நிகழ்வுகள்

### ராணுவ தலைமைத் தளபதி பிரிட்டனில் 5 நாள் பயணம்

- இந்திய ராணுவ தலைமைத் தளபதி "மனோஜ் பாண்டே", பிரிட்டனில் தனது **5** நாள் அரசுமுறை சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ளார்.

SHANMUGAM IAS ACADEMY



- ❖ பிரிட்டன் ராணுவத்தின் மிகப் பழைமை வாய்ந்த படைப் பிரிவுகளில் ஒன்றான 'கோல்டுஸ்ட்ரீம் கார்டு படையினர், மனோஜ் பாண்டேவுக்கு அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.
- ❖ இந்நிகழ்வில் அரசர் சார்லஸுக்குப் பதிலாக, "இறையாண்மையின் பிரதிநிதி" என்ற சிறப்புடன் மனோஜ் பாண்டே மரியாதையை ஏற்கவிருக்கிறார்.
- ❖ இத்தகைய கௌரவத்தைப் பெறும் "முதல் இந்தியப் பிரதிநிதி பாண்டே" ஆவார்.

SHANMUGAM IAS ACADEMY